14th March 1959]

(2) The Tanjore District Co-operative Marketing Federation in Tanjore District; and

(3) The Triplicane Urban Co-operative Society in the City of Madras.

SRI P. G. MANICKAM : இப்போது குறிப்பிடப்பட்ட ஸொஸைடிகள் மூலம் எத்தனை டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நேற்று எனக்குக் கிடைதத தகவல்படி இதுவரை 17,000 டன்னுக்கு மேலே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

SRI P. G. MANICKAM : நெல் கொள்முதல் செய்யப்படும் தாலூகாக்களிலும் அநேக கூட்டுறவு ஸொஸைடிகள் இருக்கின்றன. ஆகையால் அந்த ஸொஸைடிகளுக்கும் இந்த லைஸென்ஸ் கொடுக்க சர்க்கார் உத்தேசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பு குறிப்பிட்டது நெல் மாத்திரம் அல்ல, நெல்லும் அரிசியும். கோவாப்ப ரேடிவ் ரெஜிஸ்ட்ராருடனும் ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்களுடனும் கலந்தாலோசிக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்வது எல்லா கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குமே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் தங்களுக்கு ஏஜெண்டுகளாக மற்றவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

MR. SPEAKER : இனிமேல் 9-ம் தேதியன்று ஒத்திபோடப்பட்ட கேள்விகளை எடுத்துக்கொள்வோம்.

Glass factories

*636 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :—

(அ) நமது ராஜ்யத்தில் கிளாஸ் பாக்டரிகள் எங்கெங்கே நடைபெறு கின்றன ?

(ஆ) மேலும் நமது ராஜ்யத்தில் கிளாஸ் பாக்டரிகள் நடத்த ஏற்பாடுகள் ஏதேனும் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) There are glass factories in Salem and Attur in the Salem district, in Mettupalayam in the Coimbatore district and in Madras.

(*b*) Yes, Sir. There is a proposal for the establishment of a factory in the Industrial Estate, Guindy, for the manufacture of scientific and laboratory glassware, in the public sector. There are also proposals for the establishment of factories in the private sector, one in Madras for the manufacture of vacuum flasks, heat resisting glassware and scientific glassware and another near Madras for the manufacture of sheet-glass.

SRI V. K. KOTHANDARAMAN : கண்ணடி செய்வதற்கான கனிப் பொருள்கள் வட ஆற்காடு ஜில்லாவில் வாலாஜா தாலூகாவில் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஆகவே அவைகள் ஆராய்ச்சி செய்யப்பட்டு அங்கே ஒரு கண்ணடி தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : வட ஆற்காட்டில் அவை அகப்படுகின்றனவா என்று எனக்குத் தெரியாது. அதனுல் அதைத் தெரிந்துகொண்டு அதற்குப் பிறகு இதைப்பற்றி யோசிக்கலாம்.

[14th March 1959

SRI A. A. RASHEED : Is there any proposal to start a factory to manufacture electric bulbs in our State?

THE HON. SRI R. VENKATARAMAN : Not that I am aware of.

SRI M. JAGANNATHAN : May I know when the proposed glass factory in the Industrial Estate, Guindy, is likely to be started?

THE HON. SRI R. VENKATARAMAN : Machinery have been ordered. It will, however, take some time for foreign machinery to arrive here. It will be started in the course of the next few months.

Labour Gazette

* **643 *Q*.**—SRI P. G. **MANICKAM** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

தொழில் கெஜெட் எந்தத் தேதியில் வெளியிடப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN: "சென்னை தொழில் கெஜட்" அநேகமாக வருகிற மார்ச்சு மாத இறுதியிலோ அல்லது எப்ரல் மாத ஆரம்பத்திலோ வெளியிடப்படலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

SRI P. G. MANICKAM : இந்தத் தொழில் கெஜெட்டில் முக்கியமாக என்னென்ன சங்கதிகள் வெளியிடப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : தொழிலாளர்களைக் குறித்த சட்டங்களின்படி வகுக்கப்படும் விதிகள், தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரப் புள்ளி விவரங்கள், தொழிலாளர்கள் சம்பந்தமான பிரச்னைகள் முதலியவைகளெல்லாம் இதில் பிரசுரிக்கப்படும்.

SRI P. G. MANICKAM : முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், எத்தனையோ தொழில்களும் தொழிற்சாலைகளும் ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்டு நடத்தப் பட்டு வருகின்றன. அவைகளைப் பற்றிய விவரங்களும் இந்த தொழில் கெஜெட்டில் பிரசுரிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது லேபர் கெஜெட், இண்டஸ்ட்ரீஸ் கெஜெட் அல்ல. கனம் அங்கத்தினர் குறிப்பிடும் விஷயங்களைப் பிரசுரிப்பதற்கு தனியாக இண்டஸ்ட்ரீஸ் ஜெர்னல் ஒன்று வெளியிட்டு வருகிறோம்.

Lungis

* 648 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware that a very large number of handlooms producing lungis for export market in the Chingleput District, are facing a crisis; and

(*b*) the cause of this sudden crisis and the steps taken by the Government to find market for the lungis?